18.08.2025.

CC.30/2022

புகார்தாரர் சக்திவேல் த/பெ.ஆறுமுகம்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

எதிரி ஏழுமலை என்மீது சிவில்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பிறகுதான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சிவில் வழக்கு என்பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை ரத்து செய்யவேண்டி எதிரிதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த சிவில் வழக்கில் எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதில் என்ன என்ன ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என்மீது எதிரி மற்றம் அவரது மகன் புகார் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 26.05.2020ம் தேதி எதிரி என்மீதும், என் மகன்மீதும் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 12.11.2020ம் தேதி எதிரியின் மகன் ஜெயலட்சுமணன் எனக்கு எதிராக புகார் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. 06.10.2020ம் தேதி நான் கொடுத்த புகாரின்மீது நடவடிக்கை எடுக்காததால்தான் இந்த தனிபுகார் தாக்கல் செய்துள்ளேன்ன ன்றால் சரிதான். அந்த புகாரில் என்னை தாக்கி, என்னை கொலை மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாருக்கான சி.எஸ்.ஆர். எண்.735/2020 என்றால் சரிதான். எனக்கு எழுத் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுத்த புகாரில் என்னை தாக்கி கொலைமிரட்டல் கொடுத்த புகாருக்காக கொடுத்த சி.எஸ்.ஆர எண்ணில அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள 06.10.2020ல் நான் கொடுத்த புகாரி உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள விஷயம் எனக்கு தெரியாது. அந்த புகார் சார்பதிவளகத்தில் வைத்து எழுதப்பட்டது எதற்காக எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள சம்மத பத்திரமும் சார்பதிவளகத்தில் வைத்துதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்தும் என்டையதுதான். அந்த கிரைய பத்திரத்தில் பனஞ்சாலையோ அதில் உள்ள கிணறோ எனக்கு பாத்தியப்பட்டது என்று கிரையம் பதிவு செய்யப்படவில்லை. நான் சொல்லும் கிணறு மற்றும் பனஞ்சாலை எனக்கு கிரையம் செய்து கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் நான் கூறியுள்ள 10.11.2021ம் தேதியிட்ட சம்பவத்திற்காக புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் அதற்கும் சி.எஸ்.ஆர் கொடுத்துள்ளார்கள். அந்த புகார மற்றும் சி.எஸ்.ஆர்-யை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தனி புகாரில் எந்தவித முகாந்திரமும் இல்லையென்றால் சரியல்ல. இது முழுக்க முழுக்க சிவில் வழக்கு தகராறு என்பதால் எதிரி தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கினை வாபஸ்பெற செய்யவேண்டிதான் எதிரிக்கு எதிராக இந்த தனிப்புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 06.10.2020ம் தேதி எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் அது சம்மந்தமாக எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி எந்தவித தவறும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**